---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 பெறவேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கு உரிய இலங்கை மின்சார சபையில் இருந்து கிடைக்க வேண்டிய வருடாந்த ஒழுங்கு படுத்தல் கட்டணம் ரூபா 14.64 மில்லியன் ஆக இருந்த போதிலும் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அதற்கு நேரொத்த செலுத்த வேண்டிய மீதி ஒன்று காண்பிக்கப்படாது இருந்ததுடன் ஆணைக்குழுவால் நேரடியாக பெறப்பட்ட மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரமும் அவ்வாறான மீதி ஒன்று காணப்பட வில்லை.	தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்காக நிதிக்கூற்றுக்களை மீண்டும் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெற வேண்டிய மீதிகளில் காணப்படுகின்ற வேறுபாடுகள் தொடர்பான பகுப்பாய்வை மேற்கொண்டு உரிய நிறுவனத்துடன் இணக்கப்பாட்டிற்கு வந்து தீர்த்து வைத்தல் வேண்டும்.

1.6 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு சட்டம்			
(i)	3(1) ஆம் பிரிவு	ஆணைக்குழு அமைச்சரால் அரசியலமைப்பு சபையின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்கள் ஐந்து பேர்களை உடையதாக இருக்க வேண்டியிருந்ததுடன் அவர்களுக்கு இடையே ஏதாவது ஒரு தரப்பினர் ஒரு அங்கத்தவர் பொறியியல் துறையிலும், ஒரு அங்கத்தவர் சட்ட துறையிலும், ஒரு அங்கத்தவர் வியாபார	ஆணைக்குழு சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்கள் அமைச்சரால் அரசியலமைப்பு சபையின் இணக்கப்பாட்டின்	சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும்.

		முகாமைத்துவத் துறையிலும் தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் இருக்க வேண்டி இருந்த போதிலும் இந்த அறிக்கை விநியோகிக்கப்படுகின்ற திகதி வரையில் ஆணைக்குழு அங்கத்தவர்கள் நான்கு பேர்களை மாத்திரம் கொண்டிருந்ததுடன் சட்டத்துறையில் தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் அங்கத்தவர் ஒருவர் மேற்கூறப்பட்ட அங்கத்தவர்களுக்கு இடையே உள்ளடங்கியிருக்கவில்லை.	பிரகாரம் நியமிக்கப்படுகின்றனர். வெற்றிடமான பதவி தொடர்பாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	
(ii)	3(2) ஆம் பிரிவு	ஆணைக்குழுவின் அங்கத்தவர்களில் ஏதாவது வெற்றிடம் ஏற்படும் இடத்து 03 மாத காலங்களுக்குள் நிரப்புதல் வேண்டும். 2024 யூலை மாதத்தின் போது அவ்வாறு காணப்பட்ட ஆணைக்குழுவின் பதவிக் காலம் முடிவடைந்ததுடன் 2024 நவம்பர் 26 ஆந் திகதி புதிய ஆணைக்குழு அங்கத்தவர்கள் ஐந்து பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் அங்கத்தவர்கள் இருவரின் வெற்றிடம் காணப்பட்டதுடன் இந்த அறிக்கை விநியோகிக்கும் திகதி வரையிலும் அதில் ஒரு வெற்றிடமும் நிரப்பப்பட்டிருக்கவில்லை.	ஆணைக்குழு சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்கள் அமைச்சரால் அரசியலமைப்பு சபையின் இணக்கப்பாட்டின் பிரகாரம் நியமிக்கப்படுகின்றனர். வெற்றிடமான பதவி தொடர்பாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்காக சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும்.
(iii)	16 மற்றும் 17 ஆம் பிரிவு	இலங்கை உட்கட்மைப்பு வசதி கைத்தொழில்கள் அதாவது மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் தொடர்பான வேலைகளை ஒழுங்குபடுத்து வேண்டியிருந்த போதிலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையை மேற்பார்வை செய்வதற்காக உரிய சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக 22 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முழுவதும் பெற்றோலியம் மற்றும நீர் போன்ற கைத்தொழில்கள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வருவதற்கு முடியாது இருந்தது. அதனால் ஆணைக்குழு சட்டத்தின்	இது தொடர்பாக அமைச்சுக்கு அறிவித்து கலந்துரையாடப்பட்டதுடன் மேலும் உரிய சட்ட வரைவு மேற்கொள்ளப்பட்டு தேவையான அதிகாரங்கள் நீர் மற்றும் பெற்றோலியத் துறைகள் தொடர்பான ஆணைக்குழுவிற்கு வழங்கப்படவில்லை.	பெற்றோலியம் மற்றும் நீர் ஒழுங்குபடுத்துவதற்குரிய சட்ட ரீதியான கட்டமைப்பைத் தயாரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

		14(2) பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் போது பொது மக்கள் பயன்பாட்டு கைத்தொழில்களுக்கு இடையே மின்சார கைத்தொழிலுக்கு உரிய பணிகள் மாத்திரம் நிறைவேற்ற முடியுமாக இருந்தது.		
(ஆ)	இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
(i)	நிதிப்பிரமாணம் 103(1) மற்றும் நிதிப்பிரமாணம் 104(4)	2023 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவின் முன்னாள் இருந்த தலைவருக்கு வழங்கப்பட்ட ரூபா 5,500,000 பெறுமதியான மோட்டார் வாகனம் 2023 திசெம்பர் 11 ஆந் திகதி ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் உரிய சாரதி மது போதையில் கவனம் இன்மையாக வாகனம் ஓட்டியதன் அடிப்படையில் திடீர் விபத்திற்கு உட்பட்டு இருந்ததுடன் அதற்குரிய முழுமையான அறிக்கை 2025 மார்ச் மாதம் இறுதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட வில்லை. மேலும் இந்த விபத்தின் காரணமாக வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டமான ரூபா 2,185,052 மீளளிப்புச் செய்து கொள்வதற்கு காப்புறுதி நிறுவனம் நிராகரித்து இருந்ததுடன் அந்த நட்டம் மற்றும் வாகனத்தை மீண்டும் கொழும்பிற்கு எடுத்து வருவதற்கு செலவான ரூபா 22,000 இந்த அறிக்கை விநியோகிக்கின்ற திகதி வரையிலும் உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை	பரிசோதனையின் பிரகாரம் உரிய சாரதியை நட்டத்திற்காக பொறுப்பு வாய்ந்தவர் என உறுதிப்படுத்தப்பட்டதுடன் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு தற்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய பொறுப்பு வாய்ந்தவரிடம் நபரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 1645 (ஆ), (ஈ), 1646 மற்றும் 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தி	நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மாதாந்த பொழிப்பு ஓட்டக் குறிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் முடிவடைந்த பின்னர் அடுத்து மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவினால் மேற்கூறப்பட்ட தேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. மேலும் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனத்தின் எரிபொருள் அளவு மற்றும் ஓடப்பட்ட தூரத்தின் அளவு	எரிகின்ற எரிபொருள் அளவை சமபப்படுத்துதல், சாரதிகளை மாற்றுதல் மற்றும் பிரயாண செலவினம் தொடர்பான பொழிப்புக்கள் ஓட்ட குறிப்புக்களில் நாளது வரையாக ஆரம்பிக்கப்பட்டு	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		நாள் தோறும் நாளாந்த ஓட்ட அட்டவணை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டு சமப்படுத்த வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவுக்கு சொந்தமான வாகனங்களுக்கு உரிய செலவாகிய எரிபொருள் அளவு சமப்படுத்தப்பட்டு காண்பிக்கப்படவில்லை.	ள்ளது. எதிர்காலத்தில் பொழிப்பு ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள து.	
(இ)	2006 இன் அரசாங்கத்தின் பெறுகைககள் வழிகாட்டிக் கோவையின் மேலதிகம் 38 வழிகாட்டி 9.3.1 (ஆ)	வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 500,000 ஐ விஞ்சுகின்ற மோட்டார் வாகன பழுது பார்த்தல்களுக்காக உரிய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான Peugeot 408 வகையின் மோட்டார் வாகனத்திற்காக 2024 மார்ச் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 633,639 தொகையான பழுது பார்த்தல் நிதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் ஆணைக்குழுவின் அங்காரத்தின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	தற்போது வாகனத்தின் பழுது பார்த்தல்களுக்கா க புதிய பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெறப்படுகின்றது.	பெறுகைகள் வழிகாட்டிகளுக் கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை – பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூல் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகள் மற்றும் 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்து சட்டத்தின் 63 ஆம் பிரிவு			
	(i)	ஆணைக்குழுவின் பதவியணியினர், ஆட்சேர்த்தல் மற்றும் பதவி நடைமுறைகள் சம்பள கட்டமைப்பு தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே பொதுத்	2002 இன் 35 ஆம் இலக்க பொது மக்கள் பயன்பாட்டுகள் ஆணைக்குழு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம்	சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் போது பொது முயற்சிகள் திணைக்களத்தா ல் அறிமுகப்படுத்த

		திறைசேரியின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் தமது நிறுவனத்தின் பதவியணியினருக்கு படிகள் 08 வகையின் கீழ் மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 42,084,105 தொகையானது செலுத்தப்பட்டிருந்தது.	ஆணைக்குழுவின் பதவியணியினரின் சம்பளம் மற்றும் ஏனைய நலன்கள் தீர்மானிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.	ப் பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும்.
	(ii)	ஆணைக்குழுவின் நிலையான நிரந்தர ஊழியர்களுக்காக ரூபா 08 மில்லியன் ஆகக் கூடிய எல்லை மற்றும் 15 வருட கால எல்லையின் கீழ் வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன் உத்தேசத் திட்டத்திற்காக ஆகக் கூடியது ரூபா 05 மில்லியன் மற்றும் மீள செலுத்தும் கால எல்லை 05 வருடங்களின் கீழ் வழங்கப்படுகின்ற வாகனக் கடன் உத்தேசத் திட்டத்திற்கு திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 17 உத்தியோகத்தர்களால் பெறப்பட்ட வீடமைப்பு மற்றும் ஆதனக் கடனுக்காக ரூபா 4,112,065 தொகையும் இரண்டு உத்தியோகத்தர்களினால் பெறப்பட்ட வாகனக் கடனுக்காக ரூபா 77,352 தொகையும், ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டில் வட்டியாக மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்த வசதிகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கடன் பெறுகின்ற நோக்கத்தின் பிரகாரம் உரிய ஆதனங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2002 இன் 35 ஆம் இலக்க பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் பதவியணியினர் சம்பளம் மற்றும் ஏனைய நலன்கள் தீர்மானிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.	வாகனக் கடன் முன்மொழிவுத் திட்டத்திற்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததுடன் அரச நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு இணங்கும் வகையில் ஆணைக்குழுவினால் கடன் வழங்குதல் வேண்டும்.
(உ)	2022 சனவரி 14 ஆந் திகதிய இலக்கம் PED-1/2015 (ii) என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனம் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய எரிபொருள் படியை விஞ்சி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் பதவிகளில் ஈடுபட்டிருக்கின்ற 10	2002 இன் 35 ஆம் இலக்க பொது மக்கள் பயன்பாட்டுகள் ஆணைக்குழு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் பதவியணியினரின் சம்பளம் மற்றும் ஏனைய நலன்கள் தீர்மானிக்கும் அதிகாரம்	சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் போது பொது முயற்சிகளின் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமுல்படுத்தும் போது பொது முயற்சிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்குதல் வேண்டும்.

		உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் உரித்தான உத்தியோக பூர்வ எரிபொருள் படியை விஞ்சி மீளாய்வாண்டின் போது எரிபொருள் லீற்றர் 4,980 இற்காக ரூபா 1,724,310 செலுத்தப்பட்டிருந்தது.	ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.	
(ஊ)	2015 மே 25 ஆந் திகதிய இலக்கம் 1/2015 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி மற்றும் இலக்கம் 01/2015 (i) மற்றும் 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 பந்தி	சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனப் படிகள் ரூபா 50,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவின் 19 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 60,000 மாதாந்த உத்தியோக பூர்வ வாகனப்படி செலுத்தப்பட்டதன் காரணமாக அந்த உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட வாகனப் படி ரூபா 2,245,000 ஆகும். அதற்கு மேலதிகமாக வாகனப் படிகள் பெறுகின்ற 09 உத்தியோகத்தர்களுக்கு ஆணைக்குழுவினால் மாதாந்தம் ரூபா 20,000 வீதம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வழங்கப்பட்ட மொத்த சாரதிப் படிகள் ரூபா 2,090,000 ஆகும்.	2002 இன் 35 ஆம் இலக்க பொது மக்கள் பயன்பாட்டுகள் ஆணைக்குழு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் பதவியணியினரின் சம்பளம் மற்றும் ஏனைய நலன்கள் தீர்மானிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.	சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் போது பொது முயற்சிகளின் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமுல்படுத்தும் போது பொது முயற்சிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்குதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 28.3 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்க நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 22.9 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 51.2 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முதலீட்டு வருமானம் 33 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்தமை மற்றும் செயற்பாட்டு செலவினம் 13 சதவீதத்தால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும செலவின விடயங்களில் முக்கிய பகுப்பாய்வு

ஆணைக்குழுவின் மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பு / குறைவு கீழே காண்பிக்கப்படுகின்றது.

விபரம்	முரண்கள் அதிகரிப்பு (குறைவு / ரூபா மில்லியன்)	சதவீதம்	முரண்களுக்கான காரணம்
ஏனைய வருமானம்	(44)	33	முதலீட்டு வருமானம் வீழ்ச்சியடைந்தமை.
செயற்பாட்டு செலவினம்	23	13	பெற வேண்டிய ஒழுங்குபடுத்தல் கட்டணத்திற்காக இழப்பீட்டிற்கான ஒதுக்கீடுகள் ஏற்படுத்தியமை

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	ஆணைக்குழுவினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது கணனி முறைமை அபிவிருத்தி செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான சேவை வழங்கல் 09 இனை முறையான உடன் படிக்கையில் கைச்சாத்திடாமல் 04 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த முறைமைகள் யாவும் 2022 ஆம் ஆண்டின் இறுதி அளவில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும் ரூபா 1,129,400 ஆன முறைமை அபிவிருத்தி பெறுகைகள் 02 இற்கு இடை நடுவில் நிறுத்தப்பட்டதுடன் ரூபா 2,513,502 ஆன 04 முறைமைகள் முழுமையாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முகாமைத்துவம் தவறியிருந்தது.	PUCSL Intranet, Technician Information System மற்றும் Procurement workflow System என்ற முறைமை இந்த ஆண்டின் இறுதிக்கு முன்னர் வேலை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. HRD System Modification தற்போது வேலை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. Business Intelligence System -புதிய தொழில் நுட்பம் உற்பத்தி முறைமை நிர்மாணிக்கப் பட்டமையால் இந்த முறைமையை அபிவிருத்தி நிறுத்தப்பட்டிருந்தது. இதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை மீண்டும் அறவிடுவதற்கு உரிய கலந்துரையாடல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. Modifying DRS System இந்த முறைமை புதிதாக நிர்மாணிக்கப்பட்டமையால் காணப்பட்ட முறைமை அபிவிருத்தி செய்தல் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இந்த முறைமையை அபிவிருத்தி செய்வதற்கா செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	முறையான ஒப்பந்த உடன்படிக்கையின் அடிப்படையில் ஒப்பந்தம் கையளித்தல் வேண்டும். ஒப்பந்த தாமதங்களை தடுப்பதற்கு தொடர்ச்சியாக மேற்பார்வை மேற்கொள்ளப்படல் வேண்டும். முறைமை அபிவிருத்தி நிறுத்தப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்கா செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும் உடன்படிக்கை காலாவதியாகியிருந்த எஸ்பவர் எம்பிலிப்பிட்டிய (தனியார் கம்பனி) மற்றும் எஸ் பவர் ஜெனரேசன் மாத்தறை (தனியார் கம்பனி) மற்றும் எஸ்யாப்பவர் (தனியார் கம்பனி) என்ற சுயாதீன வலுசக்தி உற்பத்தியாளர்களிடம்	உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்ட மாதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. சட்டமாதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் மிகுதி	மின்சாரத்தை கொள்வனவு செய்யும் உடன்படிக்கை காலாவதியாகியிருந்த நிறுவனங்களிடம் இருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்தல் தொடர்பாக இலங்கை

இருந்து 2016 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை முறையே 5, 4 மற்றும் 2 சந்தர்ப்பங்களின் போது மின்சாரத்தை கொள்வனவு செய்யும் உடன்படிக்கை நீடித்து குறுகிய கால அடிப்படையில் இலங்கை மின்சார சபையினால் ரூபா 95,557 மில்லியன் பெறுமதியான கிகாவோல்ட் மணித்தியாலம் 3,290 மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட 2009 இன் 30 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக செல்லுபடியான அனுமதிப்பத்திரம் காணப்பட வேண்டிய போதிலும் அது வரையிலும் மேற்கூறப்பட்ட கம்பனிக்கு உரிய செல்லுபடியான அனுமதிப் பத்திரம் காணப்படவில்லை. அவ்வாறு சட்டத்தின் 13 ஆவது பிரிவின் பிரகாரம் இலங்கை பொதுமக்கள் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக மேற்கூறப்பட்ட காலப் பகுதிக்கு உரிய அந்த கம்பனிகளின் அனுமதிப் பத்திரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் ஆணைக்குழுவினால் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் மிளாய்வாண்டின் இறுதி வரையும் அந்த கம்பனிகளுக்கு எதிரா நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	மின்சார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
செயற்திறனாகவும் வெளிப்படையாகவும் இருக்க வேண்டிய விலை ஒழுங்குபடுத்த வேண்டிய செயற்பாடுகளை ஸ்தாபித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்திறனாக அபிவிருத்தி செய்தலை உள்ளடக்கிய 06 நோக்கங்கள் முன்கூட்டியே ஆணைக்குழுவினால் 2016 மே மாதம் ஒழுங்குபடுத்தல் கணக்குகள் தயாரிப்பதற்கான வழிகாட்டி அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2018 சனவரி மாதம் அந்த வழிகாட்டி திருத்தப்பட்டிருந்தது. அந்த திருத்தப்பட்ட வழிகாட்டியின் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் அனுமதிப் பத்திர நலனாளிகளால் உரிய கணக்காண்டு முடிவடைந்து 05 மாதங்களை விஞ்சுவதற்கு முன்னர் கணக்காய்வு செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும கணக்காய்வு	CEB ஒழுங்குபடுத்தல் கணக்கு தாமதம் அடைவதற்கு பிரதான காரணமாக அனுமதிப் பத்திர நலனாளிகள் (CEB) சுட்டிக்காட்டப்பட்டு அவர்களின் ERP தொகுதியை ஒழுங்குபடுத்தும் கணக்குகளை சரி செய்வதற்கு நாளது வரையாக்காது இருந்தமையால் ஒழுங்குபடுத்தப்பட்ட கணக்குகளைத் தயாரிப்பதற்கு ஆரம்ப (manual) முறை பயன்படுத்தப்பட்டதுடன் அதற்கான காலம் எடுக்கின்றது. எனினும் ஒழுங்குபடுத்தல் கணக்கு இன்றிய அல்லது தாமதமாகியுள்ள சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவின் நோக்கங்களை	ஒழுங்குபடுத்தல் வழிகாட்டி அறிமுகப்படுத்தும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் அனுமதிப் பத்திர நலனாளிகளை உரிய நிதிக் கூற்றுக்களை தாமதம் இன்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அறிக்கை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் உற்பத்தி , பரிமாற்றம் மற்றும் பகிர்ந்தளித்தல் அனுமதி பத்திர நலனாளிகள் இலங்கை மின்சார சபை 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான ஒழுங்குபடுத்தல் நிதிக்கூற்றுக்களின் முறையே 2023 ஆகஸ்ட் 14, 2024 சனவரி 26 மற்றும் 2024 திசெம்பர் 13 என்ற தினங்களில் அதாவது வருடாந்தம், 08 மாதங்கள் மற்றும் 06 மாதங்கள் தாமதத்துடன் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்து இருந்ததுடன் விநியோகிக்கும் அனுமதிப் பத்திரத்தாரர்கள் மற்றும் இலங்கை மின்சார தனியார் கம்பனி இது வரை மேற்கூறப்பட்ட ஒழுங்குபடுத்தல் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்து இருக்கவில்லை.	நிறைவேற்றுவதற்காக அனுமதிப் பத்திர நலனாளிகளின் தரவு தேவை படிவத்தில் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.	

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2014 திசெம்பர் 15 ஆம் திகதிய ரூபா 5,750,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,200,000 மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி உடைய PEOGEOT 408 வகையின் மோட்டார் வாகனம் 2023 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 2 வருடங்களுக்கு அண்மித்த கால எல்லை ஒன்று பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	இந்த வாகனத்தை மீண்டும் ஓட்ட நிலைக்கு கொண்டு வந்து அதற்காக உரிய மதிப்பீடு மற்றும் தொழில் நுட்ப நிலைமை தொடர்பான அறிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன் மோட்டார் வாகன தொழில் நுட்ப பயிற்சியாளர் தொடர்பான விடய அறிவுள்ள விசேட நிபுநரின் சுயாதீன பரிந்துரையைப் பெற்று பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் பழுது பார்த்தல் பூர்த்தி செய்து தற்போது பயன்படுத்தப்பட்டுள்ளது.	சொத்துக்களை கால ரீதியில் உச்ச அளவாக பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) ஆணைக்குழு தமது பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றும் போது சில சந்தர்ப்பங்களில் ஆலோசனை சேவை பெறப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது உரிய பணிகளை பூர்த்தி செய்தல் உடன்படிக்கை காலத்திற்கு		

	ஒப்பிடும் போது நீண்ட கால தாமதம் அவதானிக்கப்பட்டது.		
(i)	பெற்றோலியம் எரிபொருள் கலவை மேவுகை செய்து கொள்ளும் செயற்பாட்டு நடைமுறை தயாரிப்பதற்கு (Formulation of procedure for detecting Adulteration of petroleum fuels) ஆணைக்குழு ரூபா 4,051,750 பெறுமதி ஒன்றுக்காக 2021 ஆகஸ்ட் மாதம் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி நிறுவனத்துடன் (University of Colombo School of Computing) உடன்படிக்கை செய்திருந்தது. உரிய உடன்படிக்கையின் பிரகாரம் ஒழுங்குபடுத்துதல் பணி ஒப்பந்தம் கையளித்து 30 வாரங்களுக்குள் அதாவது 2022 ஏப்ரல் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 02 வருடங்களும் 07 மாதங்களும் தாமதத்தின் பின்னர் 2024 திசெம்பர் மாதத்தின் போது இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	இந்த இலக்குகளின் இறுதி அறிக்கை கிடைத்துள்ளது.	ஆலோசனை சேவைகளுக்கு உரிய பணிகள் உடன்படிக்கை செய்யப்பட்ட கால எல்லையில் பூர்த்தி செய்து உரிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நாட்டில் பயன்படுத்தப்படுகின்ற உராய்வு எண்ணெய்களில் அநேகமானவை மிகவும் கண்மூடித் தனமாக சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகின்றமையால் சுற்றாடல் மாசுபடுகின்றமையால் பயன்படுத்தப்பட்ட உராய்வு எண்ணெய் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்ட முறைமையை பின்பற்றி விடுவிப்பதன் மூலம் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு பங்களிப்பு வழங்கும் முன்னுரிமை நோக்காகக் கொண்ட ஆணைக்குழு 2020 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாட்டு இலக்கம் AP20/CP/LIC/08 இன் கீழ் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட உராய்வு எண்ணெய்களில் சேகரித்தல், மீள் சுழற்சி செய்தல் மற்றும் அகற்றதல் தொடர்பான பொறிமுறை ஒன்றை தயாரிப்பதற்காக திட்டமிட்டு இருந்தது. அந்தப் பணிகளுக்காக ஆணைக்குழு தனியார் ஆலோசனைக் கம்பனியுடன் ரூபா 4,796,000 பெறுமதி ஒன்றுக்காக 2022 பெப்ரவரி 25 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டு இருந்ததுடன் உடன்படிக்கைத் திகதியில் இருந்து 08 மாத காலத்தில் உரிய பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு இணங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு மேற்பட்ட	திருத்தப்பட்ட வரைவு இறுதி அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதில் அடங்கியுள்ள கண்டு பிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் அரசாங்கத்தின் பிரதான தரப்பினருக்கு சமர்ப்பிப்பதற்காக வலு சக்தி அமைச்சு அனுப்பபட்டுள்ளது.	ஆலோசனை சேவைகளுக்கு உரிய பணிகள் உடன்படிக்கை செய்யப்பட்ட கால எல்லையில் பூரத்தி செய்து உரிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	காலம் கடந்திருந்த போதிலும் மேற்கூறப்பட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.		
(iii)	கூரையின் அடிப்படையில் சூரிய வலு மின்சார உற்பத்தி தொடர்பாக மூன்றாம் தரப்பினரின் முதலீட்டுக்காக வசதிகள் வழங்குவதற்கு உரிய உடன்படிக்கை கட்டமைப்பை மீளாய்வு செய்தல் மற்றும் திருத்துல் (Review and revise the contractual structure relating to rooftop solar electricity generation to facilitate third party investments) இற்காக ரூபா 3,900,000 பெறுமதியில் ஆலோசனை நிறுவனத்துடன் ஆணைக்குழு 2022 திசெம்பர் 01 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு இருந்ததுடன் உரிய பணிகள் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியில் இருந்து 20 வாரங்களுக்குள் அதாவது 2023 மே 01 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு இணங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உடன்படிக்கை செய்து பூர்த்தி செய்தல் திகதியில் இருந்து 1½ வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்த பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இறுதி அறிக்கைக்குத் தேவையான ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.	ஆலோசனை செய்பவர்களுக்குரிய பணிகளை உடன்படிக்கை செய்யப்பட்ட கால எல்லையில் பூர்த்தி செய்து உரிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஆணைக்குழுவின் 76 பதவியணியினர்களில் 47 ஊழியர்களுக்காக மாத்திரம் ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் 28 பதவிகளுக்கு உரிய 29 ஊழியர்கள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்கள் விசேட அங்கீகாரத்தைப் பெற்று நிரப்புவதற்கோ அல்லது பதவிகளின் தேவை கால ரீதியில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த ஆண்டின் போது ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பதவிகளின் தேவைகளை கால ரீதியில் மதிப்பீடு செய்து அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்துதல் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் தேவையினை மீண்டும் மீளாய்வு செய்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	ஆணைக்குழுவின் 2024 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் பிரிவு 12 இன் கீழ் பெறுமதி ரூபா 169,584,508 ஆன 100 செயற்பாடுகளை கொண்டிருந்ததுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதில் 09 பிரிவுகளுக்கு உரிய 92 செயற்பாடுகள் தொடர்பாக 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணிகளை நிறைவேற்றும் செயல் முன்னேற்றம் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(i)	2024 ஆம் ஆண்டில் செயற்பாட்டிற்கு கொண்டு வருவருதற்கு எதிர்பார்க்கப்பட்ட நீர் நுகர்வோர்களுக்காக நியாயமான விலை ஒன்று ஏற்படுத்துதல் (Fair price for water consumers) என்ற பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட செயல் முன்னேற்றத்தை அடைந்திருக்க வில்லை.	நீர் சேவை ஒழுங்குபடுத்தல் நாளாந்த பின்புலம் 2024 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்படாது இருந்தமையால் இந்த முறைமை மற்றும் சந்தையின் முறைமை தயாரித்து பொது மக்களுக்கு நியாயமான கட்டணத் திட்டம் ஒன்றை வழங்குவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.	மிகவும் பொருத்தமான திட்டத்தை தயாரிப்பதற்கும் அந்த திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் எதிர் பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	பணி இலக்கம் AP24/TEA/01/CP/01 இன் கீழ் மின்சார சபைக்குரிய உற்பத்தி வலுக்கூடத்தில் மின்சாரம் விலையில் பெற்றுக் கொள்வதை உள்ளடக்கும் வகையில் கிரயத்தை மேற்கொண்டு கிரயத்தை உட்படுத்தி தயாரித்தல் மற்றும் அங்கீகரிப்பதற்காக மின்சார உற்பத்திக் கிரய அளவிடல் அடையாளம் இடல் (Electricity generation cost benchmarking in order to set and approve cost parameters those goes into PPAs of CEB generation plants) மற்றும் பணி இலக்கம்	AP24/TEA/01/CP/01 – தரவு காணப்படாமையின் காரணமாக உள்ளக வழங்கல் மற்றும் தரவுகளின் பயன்பாடு Benchmarking ஆய்வு மேற்கொள்ளப்பட வில்லை. அதனால் SAREP (USAID நிதியத்துடன்) நிகழ்ச்சித் திட்டம் தொழில் நுட்ப உதவியுடன் அதனை அமுல்படுத்த திட்டமிடப்பட்ட போதிலும் SAREP நிகழ்ச்சித் திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. AP24/LIC/CP/01/06 – பொது தரவு	மிகவும் பொருத்தமான திட்டத்தை தயாரிப்பதற்கும் அந்த திட்டத்தை செயற்படுத்துதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	AP24/LIC/CP/01/06 இன் கீழ் அனுமதிப் பத்திர தாரர்களுக்காக ஆணைக்குழுவிற்கு தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு சுயாதீன தரவு முறைமை ஒன்றை சமர்ப்பிக்கும் முறைமை ஒன்று அபிவிருத்தி செய்தல் (Development of independent Data Submission System for Licensees to submit information to the PUCSL) என்ற பணிகள் 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையே 20 சதவீதம் மற்றும் 25 சதவீதத்தை விட குறைந்த செயல் முன்னேற்றம் ஒன்று மாத்திரம் அடையப்பட்டிருந்தது.	களஞ்சியத்தின் அடிப்படையிலான குறைவு – குறியீடு அல்லது குறியீடு இன்றிய முறைமை திட்டமிடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி காரணமாக பெறுகை செயற்பாடுகள் தாமதம் அடைந்திருந்தது. நுண் அறிவு இயலுமையுடன் தொடர்புடைய முறைமைக்காக புதிய மாதிரி ஒன்றை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் உள்ளகக் கலந்துரையாடல் மூலம் ஒழுங்கமைத்து அதிக சுகந்திரத்தை வழங்குதல் மற்றும் API இன் அடிப்படையிலான தரவுகளைப் பெற்றுக் கொள்ளல் போன்ற நுண்ணறிவு விசேட பகுதிகளை உள்ளடக்குதல் போன்ற மாற்றங்களின் காரணமாக கேள்வி ஆவணங்கள் முழுமையாக திருத்தப்பட்டிருந்தமையும் தாமதத்திற்கு காரணமாகும். செயற்திட்டத்தின் பெறுகை செயற்பாடுகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன் முறைமையைத் தயாரிப்பதற்காக ஒப்பந்தத்தைக் கையளித்தல் சில நாட்களில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	
(iii)	2020, 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்ட உரிய ஆண்டுகளின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட இறக்குமதி மற்றும் உள்நாட்டு உராய்வு எண்ணெய்யின் அடிப்படையில் வரி விதிக்கும் கட்டமைப்பு தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் (AP 20/RA/CP/04),	AP20/RA/CP/04), வலுசக்தி அமைச்சின் கோரிக்கையின் பிரகாரம் இந்த செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் சந்தை பங்குபற்றாளர்களினால் தேவையான தரவுகள் வழங்காமையின் காரணமாக அது தாமதம் அடைந்திருந்தது.	மிகவும் பொருத்தமான திட்டத்தை தயாரிப்பதற்கும், அந்த திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பெற்றோலியப் பிரிவிற்காக இறக்குமதி செய்யப்பட்ட இடர் முகாமைத்துவ திட்டம் ஒன்றைத் தயாரித்தல், (AP21/RA/CP/01), மின்சார பிரிவிற்காக இடர் முகாமைத்துவ திட்டத்தைத் தயாரித்தல் (AP23/LIC/CP/LIC/16), போன்ற செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலேனும் பூரத்தி செய்வதற்கு தவறியிருந்ததுடன் அவற்றின் செயல் முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	AP21/RA/CP/01 இலங்கை பொற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்பினால்) தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக இந்த செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதற்கு முடியாது இருந்தது. AP23/LIC/CP/LIC/16 இலங்கை மின்சார சபையினால் தேவையான தகவல்கள் வழங்குதல் தாமதம் அடைந்ததன் காரணமாக பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்தது.